# அரையாண்டுப் பொதுத் தேர்வு - 2025

## எட்டாம் வகுப்பு

## சமூக அறிவியல்

பதிவு எண் : 

நேரம் : 2.30 மணி    மதிப்பெண்கள் : 100

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**    14 x 1 = 14

1. 1453-ஆம் ஆண்டு கான்ஸ்டான்டி நோபிள் யாரால் கைப்பற்றப்பட்டது?
   அ) பிரான்ஸ்    ஆ) துருக்கி    இ) நெதர்லாந்து (டச்சு)    ஈ) பிரிட்டன்
2. மகல்வாரி முறையில் 'மகல்' என்றால் என்ன?
   அ) வீடு    ஆ) நிலம்    இ) கிராமம்    ஈ) அரண்மனை
3. நாளந்தாவை உலகப் பாரம்பரிய சின்னமாக யுனெஸ்கோ எந்த ஆண்டு அறிவித்தது?
   அ) 2006    ஆ) 2007    இ) 2008    ஈ) 2009
4. கம்பளி மற்றும் தோல் தொழிற்சாலைகள் காணப்படும் முக்கிய இடம் ________.
   அ) பம்பாய்    ஆ) அகமதாபாத்    இ) கான்பூர்    ஈ) டாக்கா
5. புனித ஜார்ஜ் கோட்டை ஆங்கிலேயர்களால் கட்டப்பட்ட இடம் ________.
   அ) பம்பாய்    ஆ) கடலூர்    இ) மதராஸ்    ஈ) கல்கத்தா
6. கீழ்கண்டவற்றுள் எது பாறைக் கோளம் என அழைக்கப்படுகிறது?
   அ) வளிமண்டலம்    ஆ) உயிர்க்கோளம்    இ) நிலக்கோளம்    ஈ) நீர்க்கோளம்
7. புவியின் உள்ள நன்னீரின் சதவிகிதம் ________.
   அ) 71%    ஆ) 97.20%    இ) 2.80%    ஈ) 0.60%
8. அமுல் பால் பண்ணைத் தொழிலகம் ________ துறைக்கு சிறந்த எடுத்துக்காட்டாகும்.
   அ) தனியார் துறை    ஆ) பொதுத்துறை    இ) கூட்டுறவுத் துறை    ஈ) கூட்டுத்துறை
9. ஆப்பிரிக்காவின் தென்கோடி முனை ________.
   அ) கேப் பிளாங்கா    ஆ) அகுல்காள் முனை    இ) நன்னம்பிக்கை முனை    ஈ) கேப் டவுன்
10. சுனாமி என்ற சொல் ________ மொழியிலிருந்து பெறப்பட்டது.
    அ) ஹிந்து    ஆ) பிரெஞ்சு    இ) ஜப்பானிய    ஈ) ஜெர்மன்
11. உயர்நீதிமன்ற நீதிபதிகள் ஓய்வு பெறும் வயது
    அ) 62    ஆ) 64    இ) 65    ஈ) 58
12. இந்தியாவின் முதல் குடிமகன் யார்?
    அ) பிரதமர்    ஆ) குடியரசுத் தலைவர்    இ) முதலமைச்சர்    ஈ) இந்திய தலைமை நீதிபதி
13. இந்தியா ஒரு ________ கொண்ட நாடாகும்.
    அ) பல்வேறு சமய நம்பிக்கை    ஆ) பல்வேறு பண்பாட்டு நம்பிக்கை
    இ) (அ) மற்றும் (ஆ) இரண்டும்    ஈ) இவற்றுள் எதுவுமில்லை
14. இந்திய ரூபாய் குறியீட்டினை(₹) வடிவமைத்தவர் யார்?
    அ) உதயகுமார்    ஆ) அமர்த்தியா சென்    இ) அபிஜித் பானர்ஜி    ஈ) இவற்றில் எவரும் இல்லை

**II. பொருத்துக:-**    10 x 1 = 10

15.

| | | |
|---|---|---|
| 1) ஆங்கிலேயர்கள் | - | தனியார் துறை |
| 2) பம்பாய் | - | பறக்க இயலாத பறவை |
| 3) ஜான்சி | - | அடியாழப் பாறைகள் |
| 4) பஜாஜ் ஆட்டோ | - | பெயரளவுத் தலைவர் |
| 5) நெருப்புக் கோழி | - | கடவுள் நம்பிக்கையற்றிருப்பது |
| 6) கிரானைட் | - | பண்டங்களுக்கு பண்டங்கள் பரிமாற்றம் |
| 7) ஆளுநர் | - | வரி ஏமாற்றுபவர்கள் |
| 8) நாத்திகம் | - | லட்சுமி பாய் |
| 9) பண்டமாற்று முறை | - | ஏழு தீவு |
| 10) கருப்பு பணம் | - | 1600 |

III. கோடிட்ட இடங்களை நிரப்புக. 10 x 1 = 10

16. பிரெஞ்சு கிழக்கிந்திய நிறுவனம் ________ என்பவரால் நிறுவப்பட்டது.
17. அலிநகர் உடன்படிக்கை கையெழுத்திடப்பட்ட ஆண்டு ________.
18. அந்தணர் மற்றும் அரச குலத்தோரின் மகள்கள், மகன்கள் மட்டுமே ________ இந்தியாவில் கல்வி கற்க முடிந்தது.
19. இந்தியாவின் 'உள்ளாட்சி அமைப்பின் தந்தை' என்று அழைக்கப்படுபவர் ________.
20. 'புவியின் தோல்' என்று ________ அழைக்கப்படுகிறது.
21. ________ என்பது குறுகிய காலத்தில் வளிமண்டலத்தில் ஏற்படும் மாற்றங்களைக் கூறுவது ஆகும்.
22. அட்லஸ் மலை ________ கண்டத்தில் அமைந்துள்ளது.
23. இந்தியாவில் உள்ள மொத்த மாநிலங்களின் எண்ணிக்கை ________ ஆகும்.
24. சமயம் நமக்கு ________ போதிக்கவில்லை.
25. நிகழ்நிலை வங்கியை ________ என்று அழைக்கலாம்

IV. சரியா ,தவறா எனக்குறிப்பிடுக. 6 x 1 = 6

26. சுயசரிதை, எழுதப்பட்ட ஆதாரங்களுள் ஒன்று ஆகும்.
27. வில்லியம் கோட்டை சென்னையில் அமைந்துள்ளது.
28. தீப்பாறைகள் முதன்மை பாறைகள் என்று அழைக்கப்படுகின்றது.
29. குடிசைப் பகுதிகள் பொதுவாக பெருநகரங்களில் காணப்படுகிறது.
30. முதலமைச்சர் மாநிலத்தின் தலைமை நிர்வாகி ஆவார்.
31. அமெரிக்க ஐக்கிய நாடுகள் ஒற்றைக் குடியுரிமையை வழங்குகிறது.

V. பின்வரும் வினாக்களுள் எவையேனும் 10 வினாக்களுக்கு விடையளி. 10 x 2 = 20

32. இந்தியாவில் இருந்த ஆங்கிலேயர்களின் வர்த்தக மையங்களைக் குறிப்பிடுக.
33. பாளையக்காரர்கள் என்பவர் யார்? சிலரின் பெயரைக் கூறுக.
34. நாளந்தா பல்கலைக்கழகம் பற்றி உங்களுக்கு தெரிவது யாது?
35. மாகாண நகரங்கள் மூன்றின் பெயர்களைக் குறிப்பிடுக.
36. மண்ணின் வகைகளைக் கூறுக.
37. வெயிற் காய்வு என்றால் என்ன?
38. ஆப்பிரிக்கா 'தாய் கண்டம்' என அழைக்கப்படுவது ஏன்?
39. வேறுபடுத்துக : வேளாண் சார்ந்த தொழிலகங்கள் மற்றும் கடல்வளம் சார்ந்த தொழிலகங்கள்
40. மாநில சட்டமன்றத்தின் இரு அவைகளின் பெயரை எழுதுக.
41. நற்குடிமகனின் மூன்று பண்புகளைக் குறிப்பிடுக.
42. சமயசார்பின்மையை பரப்பிட பங்களித்த சில இந்தியர்களது பெயர்களைக் குறிப்பிடுக.
43. இந்தியாவில் ரூபாய் நோட்டுக்களை அச்சிட்டு வெளியிடுகிறது?

VI. விரிவான விடைதருக:(ஏதேனும் 6). 6 x 5 = 30

44. நவீன இந்தியாவின் வரலாற்று ஆதாரங்கள் பற்றி குறிப்பிடுக.
45. பிரிட்டிஷ் ஆட்சியை விரிவுபடுத்த டல்ஹௌசி பிரபு கொண்டு வந்த கொள்கையை பற்றி விவரி
46. காலனித்துவ நகர்ப்புற வளர்ச்சியைப் பற்றி விளக்குக.
47. மண் உருவாக்கச் செயல்முறைகள் பற்றி விவரி.
48. இடம் பெயர்தலுக்கான பல்வேறு காரணங்களை விரிவாக விளக்குக.
49. மூலப்பொருட்களின் அடிப்படையில் தொழிலகங்களை வகைப்படுத்தி விளக்குக.
50. முதலமைச்சரின் அதிகாரங்கள் மற்றும் பணிகளை விவரி.
51. மனித உரிமைகள் மற்றும் வாழ்வியல் உரிமைகள் - வேறுபடுத்துக.
52. சமய சார்பற்ற கல்வி நமக்கு ஏன் தேவை?
53. பண்டமாற்று முறையிலுள்ள தீமைகள் யாவை?

VII. இந்திய வரைபடத்தில் குறிக்கவும். 5 x 1 = 5

54. 1. டெல்லி 2. மதராஸ் 3. பம்பாய் 4. இந்திய பெருங்கடல் 5. ஆக்ரா

VIII. உலக வரைபடத்தில் குறிக்கவும். 5 x 1 = 5

55. 1. இந்தியா 2. ஆசியா 3. மகரரேகை 4. பசிபிக் பெருங்கடல் 5. ஜப்பான்

******